REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

சிலியில் 12 இலட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

சிலி அரசாங்கத்தின் பண விக்கக் கொள்கையின் காரணமாக, அரசாங்கத்தை எதிர்த்து 12 லட்சம் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். அந்த நெருக்கடியின் விளைவாக, விமானப் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

மலர் 3] சென்னை: ஆனி 25உ சனி (9—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 26உ ஞாயிறு (10—7—55) [இதழ் 22

பீகாருக்கா? மே. வங்கத்திற்கா? அந்த யோகம்?

ரூ. 52 கோடியில் செயற்கை எண்ணெய் தொழிற்சாலை!

நிலக்கரியிலிருந்து 30 லட்சம் டன் எண்ணெய் எடுக்கப்படுமாம்!

ஜெர்மன் பொறியியல் நிபுணர்கள் வருகின்றனர்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 52 கோடி மூலதனத்தில் ஒரு செயற்கை எண்ணெய் உற்பத்திச் சாலை நிறுவத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அத்தொழிற்சாலையை, பீகாரில் மிகுதியாக நிலக்கரி கிடைக்கும் பகுதியில் நிறுவக் கூடுமென நம்பப்படுகிறது.

மேற்கு வங்கத்தில் மேற்படி தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டாலும்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டிஷ் உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணிக்க இருக்கும் துர்காபூர் அருகிலேயே, உத்தேச செயற்கை எண்ணெய் தொழிற்சாலையும் இடம் பெறக்கூடுமாம்!

அத்தொழிற்சாலையில், நிலக்கரியிலிருந்து 30-லட்சம் டன் எண்ணெய் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது.

அந்த முப்பது லட்சம் டன் எண்ணெய் உற்பத்தியில், விமானத்திற்குப் பயன்படுத்தப்படும் 9,000 டன் உயர்ந்த எண்ணெயும் 1,50,000 டன் பெட்ரோல் எண்ணெயும் உள்ளடங்கி இருக்குமாம்!

கோவா பிரச்சினை அரசியல் பிரச்சினையே

போப், ஒப்பம்

ரோம், ஜூலை 8—

"கோவா பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையே தவிர, மதப் பிரச்சினை அல்ல"

என்று, போப்பாண்டவர் ஒப்புக் கொண்டுள்ளதாக, பண்டித நேரு கூறியிருக்கிறார்.

கத்தோலிக்க மதத் தலைவரான போப்புடன் நேரு 20 நிமிட நேரம் சந்தித்துப் பேசினார் என்று தெரிகிறது.

சட்டமன்றங்கள்

1956 நவம்பரில் கலைக்கப்படும்?

வருகிற 1957-ம் ஆண்டில் இந்தியாவில் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதால் மக்கள் சபையையும், மாநில சட்டசபைகளையும் 1956 நவம்பர் திங்கள் மத்தியில் கலைத்து விடும்படி, தேர்தல் குழு மத்திய சர்க்காருக்கு ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

தொழில் கோட்டத்தில் மற்றொரு தொழிற்சாலை!

பம்பாய் மாநிலத்திற்குப் பெரும் பால் பண்ணை ஏற்பாடு

கொழும்புத் திட்டத்தின் கீழ் நியூசிலாந்து தானமளிக்கிறது

ரூ. 3 லட்சம் மதிப்புடைய இயந்திரங்கள் முதல் தவணையாக வந்திறங்கிவிட்டன!

பம்பாய் நகருக்கு 266 கல் தொலைவிலுள்ள 'ஆனந்த்' என்ற இடத்தில், கெய்ரா மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில், ஒரு பால் பண்ணை தொடங்கப்படுகிறது. அதற்கு வேண்டப்படும் இயந்திர சாதனங்களை, கொழும்பு திட்டத்தின்கீழ், நியூசிலாந்து அரசாங்கம் நன்கொடையாக அளிக்க முன்வந்திருக்கிறது.

அந்த நன்கொடையின் முதல் தவணையாக, ரூ. 2,60,000 மதிப்புடைய இயந்திரக் கருவிகள் பம்பாய் துறைமுகத்திற்கு வந்துள்ளன.

இந்த நன்கொடையை இந்தியப் பேரரசின் சார்பில் ஏற்றுக்கொள்ளும் விழா, புதுடில்லியில் சிறப்பாக நடைபெற்று இருக்கிறது.

வந்துள்ள கருவிகளில், தயிர் கடையும் பெரிய இயந்திர மத்தும், வெண்ணெயை உறையிலிடும் இயந்திர கருவியும், ஐந்து பால் தொட்டிகளும் அடங்கியுள்ளன.

அக்கூட்டுறவு பால் பண்ணை, தனது கிளைகளை 150-ஆகக் கூட்டவும், பால் உற்பத்தியை நாள் ஒன்றுக்கு 3 லட்சம் பவுண்டுக்கு பெருக்கவும் ஒரு ஏழாண்டு திட்டம் வகுத்திருக்கிறது. அத்திட்ட நோக்கத்தை நிறைவேற்ற ரூ. 40 லட்சம் வரையில் முதலீடு செய்ய முடிவு கட்டி இருக்கிறது அப்பண்ணை.

அப்பெரும் பொருள் உதவியை, இந்தியப் பேரரசும், பம்பாய் அரசாங்கமும் கூட்டாகத் தருவதுடன், தங்கள் மூலமாக ஐக்கிய நாடு சபையிலிருந்தும், நியூசிலாந்து அரசாங்கத்திடமிருந்தும் பெற்றுத் தரும்.

தவறான எண்ணம் அகன்றால்தான்...

நாட்டிற்கு நல்ல காலம் பிறக்குமாம்!

அமைச்சரின் கண்டுபிடிப்பு

"'தகப்பன் செய்யும் தொழிலை வாரிசுகள் நடத்துவது கௌரவக் குறைவு' என்ற தவறான எண்ணம் எப்போது அகல்கிறதோ, அப்போதுதான் நாட்டிற்கு 'நல்ல காலம்' பிறக்கும்,"

என்று சென்னை மாநில கல்வி அமைச்சர் 'கனம்' சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

'நெருக்கடி' நெருங்குகிறதாம்

கோவா எல்லை, ஜூலை 8—

கோவாவின் நிலைமை வர வர மிக மோசமாக மாறிக்கொண்டே வருகிறது என்றும், ஆகஸ்டு 15-ந் தேதிக்குள் நிலைமை, மிகவும் 'நெருக்கடி'யான கட்டத்தை அடைந்துவிடுமென்றும் கூறப்படுகிறது.

'ஊராட்சி மன்றம் நிதி ஏதும் தரவில்லை'

'தினத் தந்தி' பித்தலாட்டம் குவிகிறது!

"30-6-55 'தினத் தந்தி' இதழ் சென்னை பதிப்பில், 'அண்ணாவின் தம்பியே! பொன் கம்பியே! வருக! வருக!' என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது; அதில், 'பஞ்சாயத்து போர்டு வரவேற்பு' என்ற பகுதியிலுள்ளதுபோல், சேலூர் ஊராட்சி மன்றம் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு கொடுத்தது உண்மை; ஆனால், அதன்கீழ், 'திருச்சி மாநில மாநாடு நிதிக்காக ரூ. 25 நெடுஞ்செழியனிடம் கொடுக்கப்பட்டது,' என்று வெளியிடப்பட்டிருப்பது பொய்."

"அன்றையதினம் (25-6-55ல்) சேலூர் தி.மு. கழகக் கிளையின் 5-ம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அதுசமயம் பொதுச்செயலாளரிடம் மாநில மாநாடு நிதிக்காக சேலூர் கிளைக் கழகச் சார்பில்தான் ரூ. 25 கொடுக்கப்பட்டதே ஒழிய, சேலூர் ஊராட்சி மன்றம் நிதித் தொகை எதுவும் கொடுக்கவில்லை,"

என்று தோழர் வி. இ. செயராமன் (முன்னாள் செயலாளர்) அறிவிக்கிறார்.

'முணுமுணுக்காதீர்!'

வர்த்தகர்களுக்கு அமைச்சர் வேண்டுகோள்

"நாடு தனது நிலையில் முன்னேற்றம் காணவேண்டுமென்ற விருப்பம் தங்களுக்கு இருக்குமானால், இங்கும் அங்குமாகச் சிறிது 'தியாகம்' செய்ய வர்த்தகர்கள் முணுமுணுக்கக் கூடாது"

என்று இந்திய சர்க்கார் நிலவரி அமைச்சர் சி. ஷா கூறியிருக்கிறார்.

இந்திய சர்க்காரின் 'சோஷலிச மாதிரி' சமுதாய இலட்சியத்தை அடைவதில் தனிப்பட்டோர் முயற்சியும், உழைப்பும் தேவைப்படுவதால், தனிப்பட்டோர் முயற்சியை ஒழித்துவிடும் உத்தேசம் இந்திய சர்க்காருக்குக் கிடையாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மாறாத கொள்கை!

"ஐ. நா. சபையில் மக்கள் சீனாவிற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரச்சினையில், ஐ. நா. கொள்கை மாறவில்லை" என்று அமெரிக்க அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஜூலை 15-ல் மும்முனைப் போராட்ட நினைவு நாள்

கல்லக்குடியில் செய்யவேண்டியது என்ன?

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அம்பில்—தர்மலிங்கம் அவர்கள், ஜூலை 15-ல் கல்லக்குடியில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிடுகிறார்:—

"தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கைக்கிணங்க, 1955 ஜூலை 15-ஆம் நாள், டால்மியாபுரம் இரயில்வே நிலையத்தின் பெயர்ப் பலகையிலுள்ள 'டால்மியாபுரம்' என்ற பெயரை மறைக்கும்படி 'கல்லக்குடி' என்று அச்சிட்ட தாளை ஒட்டுவதற்கு 'தொண்டர் அணி' ஒன்றை, குளித்தலை தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் அவர்கள் தலைமையின்கீழ், மாவட்டக் கழகத்தின் சார்பாக நியமிக்கிறோம். ஐந்து தொண்டர்கள் அடங்கிய அந்தத் தொண்டர் அணி, மேற்குறிப்பிட்ட பணியினைச் செய்யும்;

"'ஆண்டுக்கொரு முறை இலட்சிய நோக்கத்தை நினைவுபடுத்தும் அறிகுறியாகச் செய்ய வேண்டிய செயலாகக் கொள்ள வேண்டும், என்று பொதுச்செயலாளர் அறிவுறுத்தியுள்ளதற்கிணங்க, அந்த ஒரு நாள் மட்டுமே பெயர் மாற்றும் நடவடிக்கையை தொண்டர் அணி மேற்கொள்ளும்;

"தொண்டர் அணி 15—7—55 காலை 9 மணிக்கு கல்லக்குடி தி. மு. கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுச் சென்று, டால்மியாபுரத்தைக் 'கல்லக்குடி'யாக மாற்றும்;

"ஊர்வலத்திலும், நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் அமைதியையும், கட்டுப்பாட்டையும், கண்ணியத்தையும் கடைப்பிடிக்க வேண்டுகிறேன்,"

மன அமைதி பெற

காரணம் காட்டுகிறார்?

சோவியத் ரஷ்யாவின் பொருளாதார அமைப்பு தகர்ந்துபோகக் கூடிய நிலையில் இருக்கிறது என்றும், ரஷ்யா மிக அதிகமாகப் 'பெருத்து'விட்டதின் காரணமாக தனது தேவைகளைச் 'சமாளிக்க' முடியவில்லை என்றும், மேற்கத்திய நாடுகளுக்குச் சமமாக அது இன்னும் வலுப்பெற்று வளரவில்லை என்றும் அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ் கூறியிருக்கிறார்.

'ஏழைகளுக்கு உதவும் பணியில் ஈடுபடுக!'

வழக்கறிஞர்களுக்கு அழைப்பு

"நாட்டிலுள்ள வழக்கறிஞர்கள் அனைவரும் தங்கள் கடமையில் அடங்கியுள்ள 'சமூக' அம்சத்தைப் பரிசீலனை செய்து நாட்டு மக்களிடையே பணியாற்ற சிறிது நேரம் ஒதுக்கவேண்டும்,"

என்று இந்திய சர்க்கார் உள்நாட்டு அமைச்சர் பந்த் கூறியிருக்கிறார்.

"சட்ட உதவிச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம், ஏழை மக்களுக்குத் தங்கள் உதவியும் பணியும் கிடைக்கும்படி வழக்கறிஞர்கள் செய்யலாம்," என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—7—'55 சனி

உறுதி செய்கின்றன!

★

"முதல் திட்டத்தைப் போலவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டிற்குப் பட்டை நாமமே தீட்டப்பட இருப்பதை இந்தியப் பேரரசின் அமைச்சர் உணர்ந்திருப்பதினாலேயே அவ்வாறு கூறியிருக்க வேண்டும் என்றே நாம் யூகிக்கிறோம்,"

என்று, இரண்டு தினங்களுக்கு முன்பு நாம் இங்கு எழுதியிருந்தோம்.

நமது யூகம் சரியானதுதான் என்று உறுதிப்படுத்தும் வகையில் நேற்று செய்திகள் வந்திருக்கின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னாட்டு மக்களுக்கு வடவர் ஆதிபத்தியம் இழைத்த அநீதியை தென்னாட்டின்—திராவிடத்தின் நல்லறிவாளர்களும், நியாயவான்களும் உணர்ந்து, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகக் கண்டனக் குரலும் எழுப்பியுள்ளனர்.

ஆனால், இதுவரை அந்தத் திட்டத்தின் கர்த்தாக்கள்—திட்டக் குழுவினர், அதிகாரபூர்வமாக, தென்னாட்டவரின் ஏகோபித்த முறையீட்டிற்கு—கண்டனத்திற்கு—குற்றச்சாட்டிற்கு—எதற்குமே பதில் தந்ததாகத் தெரியவில்லை.

வடநாட்டவர்களின் தயவில் தங்கள் பிழைப்பை ஓட்ட வைத்திருக்கும் சில 'எடுபிடி'கள்தான், தென்னாட்டவரின் நியாயமான குற்றச்சாட்டிற்கு வேறு வேறு வகையான 'சமாதானம்' கூற முற்பட்டு வருகின்றனர்; திராவிட மக்களும், அத்தகையோரின் பேச்சுக்களையும் வடநாட்டு ஆதிபத்திய வாதிகளின் போக்கையும் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டும், கவனித்துக்கொண்டும்தானிருக்கிறனர்.

இதற்கிடையில், அடுத்த ஆண்டு துவக்கப்படவிருக்கிற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி இப்போதே பேச்சுக்கள் நடைபெற்றவண்ணமுள்ளன; பல மாநிலங்களும் அதற்கான திட்டங்களைத்தீட்டி திட்டக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன; நகல் திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

'இரண்டாம் திட்டம், இந்திய மக்களின் வாழ்வில் மாபெரும் மாற்றத்தை விளைவிக்கப்போகிறது,' என்றெல்லாம் செய்திகள் வந்தவண்ணமிருக்கின்றன.

அந்தத் திட்டத்தில், தென்னாடு தனக்குரிய நியாயமான பங்கைப் பெறும் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற முடியாதவாறு, இந்தியப் பேரரசின் கடந்த காலப் போக்கு இருந்து வந்திருக்கிறது.

குற்றாலத்தில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ், 'தமிழகத்தில் இரண்டாம் திட்டத்தின்படியாவது பல தொழிற்சாலைகளை நிறுவுகிற வாய்ப்பினை தரவேண்டும்,' என்று கோரியிருந்தது; அதுபோது, மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் பேசியதைத்தான், நாம் துவக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறோம்.

கோவையிலும், சேலத்திலும் பேசிய அதே டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், 'நெய்வேலித் திட்டத்திற்கு செலவிடும் பணமும், முயற்சியும் தண்டமாகும்' என்றும், 'சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது உருப்படாத செயலாகும்' என்றும் பேசியிருக்கிறார்.

இந்தக் கருத்துக்கள் இவராகக் கூறுவன என்று நம்மால் கொள்ள முடியவில்லை. இந்தியப் பேரரசு, இரண்டாம் திட்டத்திலும் தென்னாட்டைப் புறக்கணிப்பதற்கு — அலட்சியம் செய்வதற்கு,—தென்னாடு தொழில் மயமாவதில் தனக்குள்ள இயற்கையான விருப்பமை வெளிப்படாமலிருப்பதற்கு, மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் போன்றவர்களுக்கு இந்த ரகக் கருத்துக்களை ஊட்டி அவற்றைத் தென்னாட்டிற்கு வந்து கக்கச் செய்திருக்க வேண்டும் என்றுதான் நாம் கருதுகிறோம். மேலும், கிருஷ்ணமாச்சாரியின் கருத்து, டெல்லி ஆட்சியாளரின் கருத்திலிருந்து மாறுபட்டிருக்க நியாயமிருக்க முடியாது — அவர்கள் கூறுகிறபடியே!

மேலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட உருவகம் பற்றி டெல்லியிலிருந்து கிடைத்துள்ள விபரங்கள், தென்னாட்டவருக்கு அதில் நியாயமாகக் கிடைக்கவேண்டிய பங்கினைக் கொண்டது என்று கூற முடியாதவாறு இருக்கிறது.

மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, நெய்வேலி நிலக்கரித் திட்டம், சேலம் இரும்பு உருக்குத் தொழிற்சாலைத் திட்டம் ஆகியவை பற்றி வெளியிட்டிருக்கும் கருத்தும், டெல்லியிலிருந்து கிடைக்கும் விவரங்களும், 'இரண்டாம் திட்டத்திலும் தென்னாட்டிற்கு பட்டை நாமமே தீட்டப்பட இருக்கிறது,' என்ற கருத்தை உறுதி செய்கின்றன. ஆனால், 'இந்தியப் பேரரசு என்றால், அது என்ன?'—என்பதை நன்குணர்ந்திருக்கும் நமக்கு, இரண்டாம் திட்டத்திலும், தென்னாடு வடவரால் வஞ்சிக்கப்படுவது அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ ஊட்டாது. அதைப்பற்றி பின்னர் எழுதுவோம்.

புள்ளி விவரப் பல்கலைக் கழகம்

கல்கத்தாவில் அமையுமாம்

கல்கத்தாவில் உள்ள இந்திய புள்ளி விவர கழகத்தை, பட்டங்கள் வழங்கும் அதிகாரமுடைய தாக்குவதற்காக ஒரு பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கான திட்டமொன்றை இந்திய சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றனராம்.

புள்ளி விவரப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவதற்கான மசோதா ஒன்றை சீக்கிரமே மக்கள் சபையில் சர்க்கார் கொண்டு வருமாம்.

தேசிய அடிப்படையில் உருவாகும் எந்த ஒரு திட்டத்திற்கும் புள்ளி விவரங்கள் சேகரிப்புதான் பின்னணியாக இருக்கிறபடியால், அதன் முக்கியத்துவம் பற்றி பண்டித நேரு சுதந்திரம் பெற்ற நாள் முதல் வற்புறுத்தி வந்திருக்கிறார்; எனவேதான், புள்ளி விவரங்கள் சேகரிப்புப் பயிற்சி பெறுவோருக்குப் பட்டங்கள் வழங்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

பிரகாசம்-நேபாலர் 'கோஷ்டி' சண்டை

ஆந்திர விவசாயிகள் பலியாவதா?

"ரூபாய் பத்துக்கும் குறைவாக நிலவரி செலுத்தும் சிறு நிலச் சொந்தக்காரர்கள், நிலவரி விதிப்பினின்றும் விலக்களிக்கப் படவேண்டும் என்ற முன்னைய மந்திரி சபையின் கருத்து பற்றி தற்போது எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை; எனவே, அவர்கள் நிலவரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட முடியாது,"

என்று ஆந்திர முதலமைச்சர் கோபால் ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

"மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களும் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டாலும் கூட, மேற்கொள்ள வேண்டிய செலவுகளைக் கணக்கிடுகையில், இத்தகைய வருமானங்களையோ—அவற்றில் சிறு பகுதியையோகூட சர்க்கார் இழந்துவிடுவதற்கில்லை"

என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்லூரிகளில் போதனா மொழி மாற்றம்

'அவசரம் காட்டப்படமாட்டாது' என்கிறார் கல்வி மந்திரி

"அவசரமான நடவடிக்கை எதுவும் மேற்கொண்டுவிடப்பட மாட்டாது; கல்லூரிகளில் வட்டார மொழியை போதனா மொழியாக ஏற்றுக்கொள்வதை வெற்றிகரமாகச் செய்ய வேண்டும்;

"ஒவ்வொரு வட்டாரமும் அதன் எல்லைக்குள் இருக்கும் கல்வி நிலையங்களில் அந்த வட்டார மொழியை போதனாமொழியாக்கிவிட்டால், இந்தியாவின் ஐக்கியமும் ஒற்றுமையும் பாதிக்கப்படும் என சிலர் அஞ்சுகிறார்கள்; இந்தியாவின் ஒற்றுமை என்ற அடிப்படையில் சிலர், கல்லூரிகளில் இந்தியை போதனா மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கின்றனர்; வட நாட்டில் இந்தி ஏற்கனவே அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது;

"இந்தியை அப்படி ஏற்றுக்கொள்வதினால் ஒரு கஷ்டம் இருப்பது போதாதென்று இன்னொரு கஷ்டமும் வந்துசேரும் என்பது என் சொந்தக் கருத்து; அதாவது, ஆங்கிலம் எப்படி தென்னாட்டவருக்கு ஒரு பெரும் சுமையாயிருக்கிறதோ, அதேபோல இந்தியும் ஒரு பெருஞ் சுமையாகிவிடும்;

"இந்த விஷயத்தில், நான் டாக்டர் இலட்சுமணசாமி முதலியாருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; 'ஒவ்வொரு வட்டாரமும் அதனதன் மொழியை அபிவிருத்தி செய்துகொள்வதினால் ஐக்கியமும், ஒற்றுமையும் ஒருபோதும் பாதிக்கப்பட மாட்டாது,' என்பதை நிரூபித்து, 'பாதிக்கப்படும்' என்ற கூற்றை மறுத்திருக்கிறார்; அவர், சுவிட்சர்லாந்து, ரஷ்யா, கனடா ஆகிய நாடுகளை இதற்கு உதாரணமாகக் காட்டினார்;

"ஒரு நாட்டின் ஐக்கியத்திற்கு, ஒரே ஒரு மொழிதான் இருந்தாக வேண்டுமென்று எண்ணுவது, திராவிடஸ்தான் கொள்கைக்கு ஆக்கமளிப்பதாகும்,"

—என்று, சென்னை கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம், திருச்சி ரோட்டரி சங்கத்தில், 'வட்டார மொழி' என்ற தலைப்பில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"பல்கலைக் கழக முதல் வகுப்பில் பயிலும் மாணவர் ஒருவர், 'திங்கள்' என்ற சொல்லை பிழைபட எழுதியிருந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. இனி நாம், மீண்டும் இடைநிலைக் கல்வி நிலையங்களில் ஆங்கிலத்தை போதனா மொழியாக்க முடியாது; நாம் முன்னேறிச் செல்ல வேண்டும்; நான் இதைக் கூறும்போது, என்னை ஒரு மொழி வெறியன் என எண்ணிவிடாதீர்கள்.

"இந்தப் பிரச்சினை, ஒரு அரசியல் ரீதியான பிரச்சினை அல்ல; என்னைப் பொறுத்தவரையில், இது ஒரு கல்வி சம்பந்தமான பிரச்சினை.

"நாம் செகண்டரி பள்ளிகளில் ஆங்கிலத்தை மீண்டும் வைத்துக்கொள்ள முற்பட்டால், அது மாணவர்களுக்கு பெருஞ் சுமையாகவும், தடையாகவும் இருக்கும். பின்னர் நாம், ஆரம்பப் பள்ளிகளில்கூட ஆங்கிலத்தைப் புகுத்தவேண்டி வரும்; ஆனால், இயற்கையாகவே எல்லோரும் தங்கள் தங்கள் தாய்மொழியில் பேசவேண்டும் என்றே விரும்புகின்றனர்.

"பிரச்சினையை முழுவதுமாகக் கவனத்துடன் ஆராய்ந்த பிறகு மீண்டும் ஆங்கிலத்தையே போதனா மொழியாக்குவது சாத்தியமல்ல என்ற முடிவுக்கு வந்தோம்.

"அரசியல் ரீதியாகக்கூறவேண்டுமானால், ஆங்கிலம் போன்ற ஒரு அன்னிய மொழியை தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வது முடியாத காரியமாகும்;

"தென்னாட்டவர், 'ஆங்கிலமே இருக்கட்டும்,' என்று ஏற்றுக்கொள்வதாக வைத்துக்கொண்டாலும், வட இந்தியர் ஒருபோதும் அதை ஆதரிக்கமாட்டார்கள் மத்தியஅரசாங்கத்தில் ஆங்கிலம் மேலும் மேலும் அகற்றப்பட்டு, இந்தி படிப்படியாக அந்த இடத்தில் நுழைக்கப்பட்டு வருகிறது.

"ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கென மேலும் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் ஒதுக்கினாலன்றி, கல்லூரிகளில் தொடர்ந்து ஆங்கிலத்தை போதனா மொழியாக வைத்துக்கொள்ள இயலாது.

"கல்வியின் தரம் குறைந்துகொண்டே வருகிறது என்று, எங்கு பார்த்தாலும் கூச்சல் கேட்கிறது.

"கல்வியில், மொழி அறிவு—பொருள் அறிவு—இதில் எது குறைந்துவிட்டது என்று நான் கேட்க விரும்புகிறேன்; நான் நினைக்கிறேன்—'இந்த மொழி பிரச்சினைதான் கல்வியின் தரத்தைப் பாழ்படுத்துகிறது,' என்று!

'வேலையின்மையால் ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேறுகின்றனர்'

'தென்னாட்டில் பல கனரகத் தொழில்கள் துவங்க வேண்டும்'

தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் கருத்து

"திரு—கோச்சி, மைசூர் மாநிலங்கள் உட்பட தென்னிந்தியாவில் 6 கோடி மக்களிருக்கிறார்கள்; ஆனால், மிகச் சிலரே தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள்;

"வேலை இல்லாமையினால் தென்னாட்டிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்; கோச்சி இரயில்வே நிலையத்தில் இரண்டு பட்டதாரிகள் சாமான் தூக்கும் கூலிகளாக (போர்ட்டர்களாக) வேலை செய்வதாகக் கேள்விப்பட்டேன்; அந்த அளவு தென்னாட்டில் வேலையில்லாக் கொடுமை இருக்கிறது;

"இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் அமைப்பது சாத்தியமில்லை என்று கூறப்படுமானால், வேறு கன ரகத் தொழில்கள்—பவுண்டரிகள் போன்ற டஜன் கணக்கான எஞ்சினீயரிங் தொழில்கள் நிறுவ வேண்டும்; தொழில்கள் துவங்க மூலதனம் தேடியாக வேண்டும்; அத்தகைய தொழில்கள் துவங்க முன்வருவோருக்கு சர்க்கார் உதவி புரிய வேண்டும்;

"இந்தியாவின் வேறு பல பாகங்களில் தொழில் நிறுவனங்கள் பலவற்றில் பொறுப்பான வேலை செய்யும் பல தென்னிந்தியர்கள் இருக்கின்றனர்; அவர்கள் எல்லாம், தென்னிந்தியாவில் தொழில் துவங்கப்படும்போது இங்கு அழைக்கப்பட்டு, இங்குள்ள தொழிற்சாலைகளை நிர்வகிக்கச் செய்ய முடியும்,"

—என்று பிரபல தொழில் அதிபரான அனந்தராமகிருஷ்ணன் சென்னைக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறினார்:—

"தென்னாட்டில் ஒரு சிலர்தான், தொழில் நிறுவனங்களில் பணி புரிகின்றனர்; என்றாலும், அவர்கள் எல்லோரும் திறமை மிகுந்த தொழிலாளர்கள்.

"உலகத்தில் வேறெந்தப் பகுதியிலும் உள்ள தொழிலாளர்களைக் காட்டிலும் இங்குள்ளவர்கள் அதிக திறமைசாலிகளல்லாவிட்டாலும், அவர்களை ஒத்த திறமையுடையவர்கள் என்பதை பல தொழில் நுணுக்க 'டைரக்டர்'கள் கூறியிருக்கின்றனர். இத்தகு தொழிலாளர்கள் இலட்சக் கணக்கானோருக்கு வேலை தர ஏதேனும் விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்; தென்னாட்டில் மேலும் மேலும் பல தொழிற்சாலைகளைத் துவங்கவேண்டும்.

"மூலப் பொருள்கள் இல்லாமையினால், தென்னாடு, வடநாட்டைப் போலவே சில விஷயங்களில் முன்னேற முடியாதுதான்; ஆனால், எல்லோருக்கும் பயன்படக் கூடிய வேறு பல தொழிற்சாலைகள் தென்னாட்டில் துவங்கப்பட முடியும்,"

இந்தியசர்க்கார் சுகாதார திட்டங்கள்

தண்ணீர் வினியோகம், காசநோய், மலேரியா தடுப்புக்கு அதிக நிதி!

மருத்துவ வசதிகள் அதிகரிக்கக்கூடுமாம்!

புதுடில்லி, ஜூலை 7—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்திய சர்க்கார் சுகாதார இலாகாவினர் ரூ. 208 கோடிக்கு மேல் செலவில் திட்டங்கள் தயாரித்துள்ளனராம். 24 பழைய திட்டங்களைத் தொடர்ந்து அமுல் செய்யவும், 30 புதிய திட்டங்களை ஆரம்பிக்கவும் விருப்பம் கொண்டுள்ளதாம்.

எல்லா மாநிலங்களுக்கும் நீர் வினியோகம், சுகாதார வேலைகள் ஆகியவற்றிற்கு ரூ. 90 கோடி. ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவக் கல்லூரிகள்

10 மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்கவும், விரிவுபடுத்தவும் ரூ. 11·90 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

க்ஷயரோக நிலையங்கள்

300 க்ஷயரோக சிகிச்சை நிலையங்கள் அமைக்க ரூ 8 02 கோடி செலவிடப்படுவதுடன், க்ஷயரோக நிவாரண வேலைகளுக்காக ரூ. 4 57 கோடி செலவிடப்படும்.

பி. சி. ஜி. ஊசி

பி. சி. ஜி. ஊசி போடுவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கும் மானியத் தொகை ரூ. 25 லட்சமாக உயர்த்தப்படும்.

நோயாளிகளுக்கு விடுதிகள்

மூளைக் கோளாறுகள், குஷ்டரோகம், ஆகிய ரோய்களால் பீடிக்கப்பட்டவர்கள், ஊனமடைந்தவர்கள் ஆகியோருக்கு விடுதிகள் கட்டித் தர ரூ. 5 கோடி செலவிடப்படுமாம்.

பல் மருத்துவக் கல்லூரி

6 புதிய பல் மருத்துவக் கல்லூரிகள் கட்ட ரூ. 2 16 கோடியும், மாவட்டங்களிலுள்ள மருத்துவத் தலைமை விடுதிகளில் 250 பல் மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்த ரூ. 1 23 கோடியும் செலவிடப்படும்.

'விடுமுறை' விடுதிகள்

கடற்கரையொட்டிய பிரதேசங்களிலோ, மலைப் பகுதிகளிலோ மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு 30 விடுமுறை விடுதிகள் கட்டி தரப்படும்; மேலும் 5,000 'தாயி'களுக்குப் பயிற்சி அளிக்க ரூ. 1 57 கோடி செலவிடப்படும்.

மலேரியா ஒழிப்பு

மலேரியா ஒழிப்புத் திட்டத்தைத் தொடர்ந்து நடைபெறச் செய்ய ரூ. 18 93 கோடி ஒதுக்கப்படுகிறது. மலேரியா மட்டுமல்லாமல், ஆனைக்கால் வியாதியை ஒழிக்க ரூ. 9 85 கோடி செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

குடும்பக் கட்டுப்பாடு

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ரூ. 1 கோடி செலவிடப்படும்.

சுகாதார இலாகாவினர் திட்டமிட்டுள்ள மேற்கூறப்பட்ட திட்டங்களனைத்தும் திட்டக் குழுவின் பரிசிலனையில் இருந்து வருகிறது

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், சுகாதாரத்திற்காக மொத்தம் ரூ. 138 கோடிதான் ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போதுள்ள நிலவரப்படி இரண்டாவது திட்டத்தில் இத்தொகைபோல் இரண்டு மடங்கு செலவிடப்படும் என்று தெரிகிறது.

தொழில் அபிவிருத்தித் திட்டங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் சில தொழில் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்துள்ளது. சில விவரங்கள் இங்கு தரப்படுகிறது:-

இரசாயன உர உற்பத்தி

இரண்டு இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலையில் ஒன்று பக்ரா — நங்கலில் ஏற்படுத்தப்படுமென்றும், டி. டி. டி. உற்பத்தித் தொழிற்சாலை திரு-கொச்சி மாநிலத்தில் ஆல்வாயில் நிறுவப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றப் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான இடம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லையாம்.

ரூ. 64 கோடி செலவில் தயாரிக்கப்பட இருக்கும் இரசாயன உர உற்பத்தித் தொழிற்சாலைகளின் காரணமாக 7,500 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், இரண்டாவது திட்ட அமுல் நடத்தப்படும் கால மத்தியில் உபரியாக ரூ. 35 கோடி செலவில் இரசாயன உர உற்பத்தி சக்தியை அதிகரிக்கக் கூடிய ஒரு திட்டம் மேற்கொள்ளப்படுமென்றும் தெரிகிறது.

டி. டி. டி. உற்பத்தி

ரூ. 75 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட இருக்கும் இரண்டாவது டி. டி. டி. உற்பத்திச்சாலை ஆண்டொன்றில் உபரியாக 1,400 டன் டி. டி. டி மருந்து உற்பத்தி செய்யும் என்றும், புதுடில்லியிலுள்ள டி. டி. டி. உற்பத்திசாலையை அபிவிருத்தி செய்ய ரூ. 25 லட்சம் செலவாகலாம் என்று மதிப்பிடப்படுகிறதாகவும் கூறப்பட்டுள்ளது.

'பெனிசிலின்' உற்பத்தி

புனா அருகில் உள்ள பிம்ப்ரீ தொழிற்சாலையில் ஆண்டொன்றுக்கு அதன் அதிகபட்ச உற்பத்தி எல்லையான 11½கோடிபெனிசிலின் மெகா யூனிட்டுகள் தயாரிக்கப்படுமெனவும், மேலும் ரூ. 20 லட்சம் செலவில் 2¼ கோடி பெனிசிலின் மெகா யூனிட்டுகள் தயாரிக்கக் கூடிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும் என்றும், பெனிசிலின் மட்டுமல்லாமல், ஸ்டிரெப்டோமைசின், குளோரேமைசிடின், இன்சிலின் போன்ற மருந்துகள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதென்றும் தெரிகிறது.

தந்திக் கம்பி உற்பத்தி

ரூ. 7½ லட்சம் செலவில் ரூப்நாராயண்பூரிலுள்ள தந்திக் கம்பித் தொழிற்சாலையின் உற்பத்தி இரட்டிப்பாக்கப்படுமாம்.

ரூ. 2 கோடி செலவில் பெங்களூர் இயந்திர உற்பத்திச்சாலை அபிவிருத்தி செய்யப்படுமாம்.

கப்பல் கட்டும் நிலையம்

விசாகை கப்பல் கட்டும் நிலையத்தில் 75 முதல் 90 டன் வரையுள்ள பெரும்பான்மை சாமான் கப்பல்களும், சில கடற்படைக் கப்பல்களும் கட்டப்படுமாம். இறுதியில் இந்த நிலையம், ஆண்டொன்றுக்கு 6 கப்பல்களை தயாரிக்கக் கூடிய நிலையை அடைந்துவிடும் என்று தெரிகிறது. இத்திட்டம் தற்போது கொள்கை அளவில் தான் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதென்றும், வருகிற 1959-ம் ஆண்டில் பூர்த்தி அடையும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

பெட்ரோல், செயற்கை எண்ணெய்

பெட்ரோல் எண்ணெயின் உற்பத்தியும் அதிகரிக்கப்படும். விசாகையிலுள்ள 'கால்டெக்ஸ்' எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் 1957-ல் உற்பத்தி துவங்குமென்றும், ஆண்டொன்றுக்கு அதில் 67,000 டன் அதிகஉற்பத்தியாகும் என்றும், அதற்காகும்செலவுமதிப்பு ரூ 11½ கோடி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

செயற்கை எண்ணெய் உற்பத்தித் திட்டத்திற்கு ரூ. 55 கோடி செலவிடப்படுமாம். ஆண்டொன்றுக்கு அங்கிருந்து 3 லட்சம் டன் செயற்கை எண்ணெய் தயாரிக்கப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

கனரக, மின்சாரப் பொருள்

கனரக, மின்சாரப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை சம்பந்தமாக ரூ. 20 கோடி செலவிடப்படுமாம்.

உப்பு உற்பத்தி

இது தவிர, உப்பு உற்பத்தியின் அபிவிருத்திக்கு ரூ. 2 கோடி செலவிடப்படுமாம்; சர்க்கார் துறை, தனியார் துறை ஆகிய இரு துறைகளிலும் போதிய கவனம் செலுத்தப்படும் என்றும், உப்புத் தொழிலாளரின் நிலையும் உயருமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நெய்வேலி நிலக்கரி

நெய்வேலி நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் திட்டத்திற்கான செலவுகளை இந்த ஆண்டு ஜனவரி திங்கள் முதல் இந்திய சர்க்[illegible] ஏற்றுக்கொண்டுள்ளனராம்.

அதன்படி, 2,11,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய 32 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியும், வீடுகளில் எரிபொருளாக உபயோகிக்க 7 லட்சம் டன் கரியும் அங்கு தோண்டி எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்

சிறு தொழில்கள் அபிவிருத்தி முயற்சி!

புதுடில்லியில் கைத் தொழில் அமைச்சர்கள் மாநாடு

பெங்களூர், ஜூலை 7—

சிறு தொழில்கள், கைத்தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ள மாநில அமைச்சர்கள், பல்வேறு பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்கொண்ட மாநாடு ஒன்று இந்திய சர்க்காரால் விரைவிலேயே புதுடில்லியில் கூட்டப்படும் என்று தெரியவருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான யோசனைகள் பற்றி மேற்படி மாநாடு ஆலோசிக்கும் என்று மேற்படி தகவலை தெரிவித்த மத்திய உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி கூறியிருக்கிறார்.

சிறு தொழில்கள் போன்ற தொழில்கள் சம்பந்தமாக பல்வேறு மாநிலங்களின் தேவைகளையும் தெரிவிக்கும் ஒரு வரிவான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காரிடமும், திட்டக் குழுவிடமும் வருகிற ஆண்டில் தாக்கல் செய்யப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார்.

கரூரில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

பாராட்டு - வரவேற்பு பொதுக்கூட்டம்

4—7—55 மாலை 4-50 மணிக்கு பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கரூர் இரயில்வே நிலயத்தில், வாழ்த்தொலிகள் முழங்க, மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு ஏராளமான கழகத் தோழர்களால் வரவேற்கப்பட்டார்.

மாலை 5-30 மணிக்கு, பொதுச் செயலாளர் அவர்களும் திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கம் அவர்களும் திறந்த காரில் அமர்த்தி, வாழ்த்தொலிகளுடன், இன்னிசைக் கருவிகள் முழங்க ஊர்வலமாக முக்கிய தெருக்களின் வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் கரூர் நெசவாலைத் தொழிலாளர்களும், மாணவர்களும், பொது மக்களும் கழகக் கொடிகளுடன் கலந்து கொண்டனர். தோழர் இராதா தலைமையில் சைக்கிள் ஊர்வலம்நடைபெற்றது. ஊர்வலத்தின்போது, 15, 19-வது வட்ட கிளைக் கழகங்களில் பொதுச்செயலாளர் அவர்களால் கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

மாலை 7 மணிக்கு தோழர் பி. கிட்டு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

குளித்தலைத் தோழர் முத்துக் கிருஷ்ணன் சிறிது நேரம் பேசினார். பின்னர் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும், திருச்சி மாவட்டச் செயலாளர் அம்பில் தர்மலிங்கம் அவர்களுக்கும் பல கிளைக் கழகங்கள், மன்றங்கள், தொழிற் சங்கங்கள், தனிப்பட்டோர் நிறுவனங்கள் சார்பில் மலர்மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டு, வரவேற்பிதழ்களும் வாசித்தளிக்கப்பட்டன.

வரவேற்புகளை பெற்றுக்கொண்டு பொதுச்செயலாளரும், மாவட்டச் செயலாளரும் நன்றி தெரிவித்தும், கழகக்கொள்கையை விளக்கியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

கரூர் நகரக் கிளை, 15-வது வட்டக் கிளை, 19-வது வட்டக் கிளை, கருணாநிதி நாடக மன்றம் ஆகியவைசார்பில் பொதுச்செயலாளருக்கும், மாவட்டச் செயலாளருக்கும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

கரூர் நகரக் கிளையினர் பொதுச் செயலாளருக்கும், மாவட்டச் செயலாளருக்கும் கைத்தறி ஆடைகள் அணிவித்தனர்.

பொத்தனூர் தி. மு. க., நன்னியூர் பகுத்தறிவு நாடக மன்றம், கரூர் சலவைத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் கைத்தறி ஆடைகளும், சொய்யல் தி. மு. கழகம், நன்னியூர் இளைஞர் நாடக மன்றம், கரூர் வட்ட நெசவுத் தொழிலாளர் கழகம், கரூர் திராவிட ஆலைத் தொழிலாளர் கழகம், வேடிச்சிபாளையம், முத்துராஜபுரம், வேலாயுதம்பாளையம், தவுட்டுப்பாளையம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பில் மலர் மாலைகளும், இரத்தினம் எம். எல். ஏ.,—பெரியார் உணவு விடுதி போன்ற தனிப்பட்டோர் சார்பில் மலர் மாலைகளும் அணிவித்து பொதுச் செயலாளரையும், திருச்சி மாவட்டச் செயலாளரையும் கௌரவித்தனர்.

ஆச்சாரியார் எதிர்ப்புக் கூச்சல் காற்றோடு போகிறது!

பி. சி. ஜி. இயக்கத்திற்கு ரூ. 25 லட்சம் தருவதற்குத் திட்டம்

சென்னை கிண்டியில் உள்ள பி. சி. ஜி. ஊசி மருந்து உற்பத்திச்சாலைக்கு இரண்டாம் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கென மத்திய சுகாதார இலாகா தயாரித்திருக்கிற திட்டப்படி, ரூ. 3 லட்சம் கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டப்படி, பி. சி. ஜி. ஊசி இயக்கத்திற்குத் தரப்பட்ட ரூ. 14·5 லட்சம் இப்போது இரண்டாம் திட்டத்தில் ரூ 25லட்சமாக உயர்ந்திருக்கிறது என்று தெரியவருகிறது.

12000 கிராமங்களுக்கு மின்சார வசதி

முதல் திட்டப்படி 6,500 கிராமங்கள் வரை மின்சார வசதி பெற்றுள்ளன. இரண்டாம் திட்டப்படி, சுமார் 10 முதல் 12 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

திட்ட காலத்தில் ஆண்டுதோறும் இதற்காக, ரூ. 10 கோடி ஒதுக்க வேண்டுமென திட்டக் குழு கருதுகிறதாம்.

விலை வீழ்ச்சியைத் தடுக்க சர்க்கார் வாங்கிய கோதுமை

சுலபமாக விற்றுவிட முடியுமென மத்திய மந்திரி தகவல்

வடநாட்டில், உணவுப் பொருள் விலை வீழ்ச்சியைத் தடுத்து விவசாயிகளுக்குப் பாதுகாப்புத் தருவதற்காக இந்திய சர்க்கார் விலைக்கு வாங்கியுள்ள கோதுமையை, நாட்டிற்குள்ளேயே சுலபமாக விற்றுவிட முடியும் என்ற தகவலை, மத்திய உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் வெளியிட்டிருக்கிறார்.

ரூ. 2 கோடிக்கு சற்று அதிகம் பெறுமான 70, அல்லது 80 ஆயிரம் டன் வரை கோதுமை வாங்கப்பட்டிருக்கலாம் என அவர் மதிப்பிடுகிறாராம்.

கம்பளி நெசவுத் தொழிலுக்கு உதவி

அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் தரும் கடன்

ஐதராபாத் மாநிலத்தில், கம்பளித் துணி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் கைத்தறி நெசவுத் தொழில் அபிவிருத்திக்காக மத்திய சர்க்கார், ஐதராபாத் சர்க்காருக்கு ரூ. 3,57 000 வட்டியில்லாக் கடன் தந்திருப்பதாகத் தெரிகிறது.

ஐதராபாத்தில்தான் இந்தியாவிலேயே அதிகமான கம்பளி நெசவுத் தறிகள் உள்ளன. இந்தக் குடிசைத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக மாநில சர்க்கார் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மந்திரிகள் தப்பினர்

அம்பாசமுத்திரம், ஜூலை 7—

இந்திய சர்க்கார் இரயில்வே துணை அமைச்சரான ஓ வி அழகேசனும், சென்னை மாநில விவசாய அமைச்சர் பக்தவத்சலமும் அம்பாசமுத்திரத்திற்கருகில் கார் விபத்துக்குள்ளாயினர் என்றும், ஆயினும் விபத்துக்கள் எதுவும் நேரிடாமல் தப்பித்துக்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

அம்பாசமுத்திரத்தை அடுத்த சேரன்மாதேவி என்ற இடத்திலிருக்கும் இரயில்வே நிலயத்தைப் பார்வையிட்டுவிட்டு குற்றாலம் திரும்புகையில் கடையம், மதலம்பாறை எனும் இரண்டு ஊர்களுக்கும் இடையில் அவர்கள் ஏறிச் சென்ற கார் வந்துகொண்டிருக்கையில், அந்தக் காரின் முன் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ள அச்சு முறிந்துவிட்டதாம். யாருக்கும் சேதமில்லையாம். காரைத் தொடர்ந்துவந்த போலீஸ் ஜீப் மறுபடியும் அவர்களை ஏற்றிக்கொண்டு குற்றாலம் சென்றதாம்.

கல்வி அமைச்சர் கூற்றுக்கு பொதுச்செயலாளர் கருத்துரை

தென்னாட்டிற்கு டில்லி செய்துவரும் துரோகத்தை ஆச்சாரியாரைக் கேட்டாலும் போதுமே!

"நெருப்புப் பெட்டிக்கு வெள்ளையன் வரி போட்டபொழுது, காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தனர்; அப்போது சத்தியமூர்த்தி அய்யர், 'நெருப்புப் பெட்டிக்கும் கோவணம் கட்டுகிறன்' என்றார். இப்பொழுது ஆட்சிக்கு வந்திருப்பவர்களோ, வெள்ளைக்காரனையும் மிஞ்சிவிட்டார்கள். வெள்ளையன் குரோசுக்கு 8 அணா வரி விதித்தான்—இந்த அகிம்சாமூர்த்திகளோ, 2 ரூபாய் வரி விதித்து உள்ளனர். சாத்தூர், சிவகாசி, நாமக்கல் போன்ற பகுதிகளில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளிலிருந்து ஆண்டொன்றுக்கு வரியாக ரூ. 5½ கோடி வடநாடு செல்கிறது. இந்தியாவில் விளையும் தென்னையில் 90 சதவிகிதம் திராவிடத்திலேயே கிடைக்கிறது. அதனின்றும் கிடைக்கும் வரியோ, 'வருமான வரி—சுங்க வரி—சுரங்க வரி—இறக்குமதி, ஏற்றுமதி வரி' என்ற பெயரால் டில்லிக்கு அனுப்பப்படுகிறது. அதே நேரத்தில், இங்கு ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவோ, தொழிற்சாலை ஏற்படுத்தவோ வேண்டுமானால், டில்லியிலிருந்து அனுமதி பெறவேண்டியுள்ளது.

"செல்வம் நிறைந்த தென்னாட்டுப் பெருங் கோயில்களை—சிதம்பரம், மதுரை, பழநி போன்ற இடங்களிலிருக்கும் கோயில்களை தங்கள் நிர்வாகத்தில் கொண்டுவர டில்லி ஆட்சியிடம் திட்டம் வகுத்துள்ளதாம்; இது தென்னாட்டை மேலும் சுரண்டுவதற்கு புதிய ஒரு வழியாகும்.

"ஆச்சாரியார் முதன் மந்திரியாக இருந்தபொழுது, சென்னை மேல் சபையில் மூன்று கோடி ரூபாய்க்கு புது வரி போடும்பொழுது, 'நான் டில்லியைக் கேட்டால், 'பணம் இல்லை' என்று கைவிரிக்கிறது; என்னிடம் உள்ள மாடெல்லாம் சொத்தை—நல்ல மாடுகளை டில்லி எடுத்துக்கொண்டது,' என்று கூறினர்; நாம் கேட்கிறோம்—'கறவை மாடுகளை டில்லிக்கு அனுப்பிவிட்டு, நாம் ஏன் சொத்தை மாடுகளை வைத்துக் கொள்ளவேண்டும்?'—என்று! இவைகளைக் கொண்டேதான், 'திராவிடம் பிரிய வேண்டியது அவசியம்' எனக் கூறுகிறோம்."

—இவ்வாறு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சநூரில் நடைபெற்ற வரவேற்புப் பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டு விட்டு, தொடர்ந்து பேசியதாவது:—

"அமைச்சர் சுப்பிரமணியம், 'டில்லி சர்க்கார் வடநாட்டுக்குச் செய்ததைவிட தென்னாட்டுக்குத்தான் அதிகம் செய்து இருக்கிறது,' என்று அதிகாரபூர்வமாக அறிவிப்பதாகக் கூறியுள்ளார். நான் அதிகாரபூர்வமற்ற முறையில் கூறுகிறேன்—'டில்லி சர்க்கார் முழுப் பொறுப்பேற்று செய்த திட்டங்கள் தென்னாட்டிற்கு ஒன்றுமில்லை; ஆனால், மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் சேர்ந்து தென்னாட்டிற்குச் செய்த திட்டங்களில் துங்கபத்திரா திட்டம் ரூ. 49 கோடி 65 லட்சம் - கீழ் பவானி ரூ. 9 கோடி - மணி முத்தாறு ரூ. 3 கோடி 98 லட்சம்; வேலை ஆரம்பித்து 5 ஆண்டுகள் ஆயிற்று - வேலை முடிவடைய இன்னும் 5 ஆண்டுகள் ஆகும் - மொத்தமாக தென்னாட்டிற்கு ரூ. 70 கோடி 40 லட்சம் செலவில்தான் இரண்டு சர்க்காரும் சேர்ந்து திட்டங்கள் மேற்கொண்டிருக்கின்றனர்'—என்று!

"ஆனால், வடநாட்டில், டில்லி சர்க்கார், நேரடியாக எடுத்துக்கொண்ட திட்டங்கள் பல—அவற்றில், பக்ரா - நங்கல் திட்டம் ரூ. 156 கோடி; அது தற்பொழுது முடிவடையும் நிலையில் உள்ளது. நேரு, அலகாபாத்தில் பேசும்பொழுது, 'உலகிலேயே பக்ரா-நங்கல் அணைக்கட்டிற்கு ஈடு இணையானது வேறு கிடையாது' என்றார். அங்கே 2,500 என்ஜினியர்கள் வேலை செய்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். தாமோதர் பள்ளத்தாக்கு முதல் கட்டத்திற்கு ரூ. 77 கோடி 80 லட்சம்; ரிகால் திட்டத்திற்கு முதல் கட்டம் ரூ. 33 கோடி 75 லட்சம்; மொத்தமாக வடநாட்டுக்கு ரூ. 493 கோடி 75 லட்சம் செலவழித்துள்ளனர். மேற்கொண்டு ரூ. 150 கோடி செலவழிக்கவும் திட்டமிட்டுள்ளனர். இந்த இரண்டிற்குமுள்ள வேறுபாட்டைத்தான் நாம் இதிலிருந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"நிதி அமைச்சர் பேசுகிறார்—'வடநாட்டை விட தென்னாட்டுக்குத்தான் அதிகம் செய்துள்ளனர் மத்திய சர்க்கார்' என்று! அவரோடு கூட்டத்தில் வாதாடவும் நான் தயாராக உள்ளேன் — அவர் வேண்டுமானால் புள்ளி விபரத்தோடு மறுக்கட்டும். அவர் பெரியநாய்க்கன் பாளையத்தில் மூன்று மாதத்திற்கு முன் பேசும்பொழுது, 'பெரும் தொழிற்சாலைகளைத் தென்னாட்டிலும் அமைக்க வேண்டும்,' என்று குறிப்பிட்டுள்ளார். அதில் உள்ள 'உம்'மை, இல்லாததை உணர்த்துகின்ற 'உம்'மையாகும். 'ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே தொழிற்சாலைகளை ஏற்படுத்தினால் அங்கு பொருளாதாரம் குவியும்; இம்மாதிரி செய்துகொண்டே போனால் தென்னாட்டில் விரும்பாத விளைவுகள் ஏற்படும்,' என்றும் வேறு அவர் பேசியுள்ளார். இப்படி முன்னுக்குப் பின் முரணைப் பேசுகிறார் சுப்பிரமணியம். பண்டாரங்களும், பரதேசிகளும் இவ்வாறு கூறினால் வருந்துவதற்கொன்றுமில்லை; ஆனால் அரசியலில் ஈடுபட்டுள்ளவர்கள் இதுமாதிரி பேசுவது அரசியல் நாகரீகமாகாது."

[பொதுச்செயலாளர் பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

வாரத்திற்கு ஒருமுறை அமைச்சர் ஆசிரியராகிறார்

வாரத்தில் ஒருமுறை, ஒரு மணி நேரம் பள்ளிக்குச் சென்று மாணவர்களுக்கு பாடபயிற்சி அளிக்கப் போவதாக மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா தெரிவித்திருக்கிறார்.

லண்டனில் நேரு

ரோம் நகரிலிருந்து புறப்பட்ட நேரு லண்டன் சேர்ந்துள்ளார்.

விமான நிலையத்தில் அவரை பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன் வரவேற்றார். இருவரும், அங்கிருந்து பக்கிங்காம் ஷயரிலுள்ள அரசாங்க மாளிகைக்குச் சென்றுள்ளனர்; அங்கு பேச்சு வார்த்தைகள் நடைபெறக்கூடும்.

சென்னையில்

மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்

"10-7-55 காலை 9 மணிக்கு, சென்னை, கோகலே மண்டபத்தில், தோழர் அலிசேக் மன்சூர் தலைமையில் 'எது தேவை' என்னும் பொருள் பற்றி, தோழர் டி. கே. சீனிவாசன் சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை அணா 8, 4.

தோழர்கள் பெருவாரியாக வந்து மாநில மாநாட்டு நிதிக் கூட்டத்தைச்சிறப்பிக்கவேண்டும்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இளம் பரிதி வேண்டிக்கொள்கிறார்.

இந்தியாவிலிருந்து கோவாவைத் துண்டிக்க!

அகழிகள் வெட்டப்படுகிறது

சௌராஷ்டிர மாநிலத்தின் தென் கோடியில் உள்ள டையூவில், போர்ச்சுகலின் ஆதிக்கத்திலிருந்துவரும் கோக்லா எனப்படும் கிராமம் இந்தியாவினின்றும் துண்டிக்கப்பட்டுவிடுமென்று கூறப்படுகிறது. அந்தக் கிராமத்தின் வடக்கு எல்லை நெடுக, ஆழமான அகழி ஒன்றை போர்ச்சுகீசிய அதிகாரிகள் வெட்டி வருகின்றனராம்.

அந்த அகழி வெட்டும் வேலை கடந்த 2 திங்களாக வெகு மும்முரமாக நடைபெற்று வருவதாகவும், அந்த அகழியின் ஆழம் 7 அடியாகவும், அகலம் 15 அடியாக இருப்பதாகவும், கடல்நீரைக்கொண்டு மேற்படி அகழி நிரப்பப்படும் என்றும் தகவல் கிடைத்துள்ளது. ஏற்கனவே 300 கெஜ தூரத்திற்கு அகழி வெட்டப்பட்டுவிட்டதாம்!

★

மேலும் இருவர் பலி!

கோவா விடுதலை இயக்கக் கிளர்ச்சியின்போது, போர்ச்சுகீசிய போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி காயம்பட்ட கோவாதேசியவாதிகளானஜோர் எஸ். பர்னாந்து என்பவர், போர்ச்சுகீசிய மருத்துவ மனையில் மரணமுற்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது

சாந்தர் எனும் கிராமத்திற்கு அருகாமையில் அவர் தமது காரில் சென்றுகொண்டிருக்கையில், போர்ச்சுகீசியப் போலீசார், காரை நிறுத்துமாறு கேட்டனராம். ஆனால், காரை ஓட்டிச்சென்றவர் நிறுத்தவில்லையென்றும், உடனே போலீசார் அருகில் சென்று துப்பாக்கியால் சுட்டதில் மேற்படி கார் ஓட்டினவர் காரிலேயே உயிர் துறந்தார் என்றும், திரு பர்னாந்தாவின் அடிவயிற்றில் பலத்த குண்டுக் காயம் பட்டதாகவும், மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகையில் மரணமுற்றார் என்றும் தெரிய வருகிறது.

சத்துள்ள செயற்கை அரிசி

வாஷிங்டன், ஜூலை 8—

இங்குள்ள இந்திய விஞ்ஞானி ஒருவர் செயற்கை அரிசியை உற்பத்தி செய்வது பற்றி ஆராய்ச்சிகள் நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருடைய அந்த ஆராய்ச்சிகள் வெற்றி பெறுமானால், உலகத்தவருக்கெல்லாம் ஏராளமாக ஆரோக்கியமான உணவு கிடைக்கக்கூடுமாம்.

கழகக் கூட்டங்கள்

★

அம்மாசத்திரம்
(குடந்தை அருகில்)
கடை வீதியில்
10—7—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: சு. பத்மநாபன்
பேசுவோர்:
கே. கே. நீலமேகம்
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

மன்னார்குடி
தேரடியில்
10—7—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,
சத்தியவாணிமுத்து

★

அய்யம்பேட்டை

15—7—55 மாலை 6 மணிக்கு, ஆண் பாடசாலைக்கு அருகில், தோழர் மு தணிகாசலம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, காஞ்சி கல்யாணசுந்தரம், சி. வி. எம். அண்ணாமலை, இரா. அர்த்தநாரி ஆகியோர் பேசுவர்.

சேலம் மாவட்ட தி. மு. கழகச்செயலாளர்கட்கு

★

"மாநில மாநாட்டு நிதியை அனுப்பி வைக்குமாறு பல அறிக்கைகள் அனுப்பியும், பெருவாரியான கிளைகள் இன்னும் தொகையை அனுப்பி வைக்காதது வருந்தத்தக்கதாயிருக்கிறது.

"இனிமேலும் தாமதம் செய்யாமல், கேட்டுக்கொண்ட தொகைகளை தயவு செய்து, 'பி. எம். குப்புசாமி, பொருளாளர், சேலம் மாவட்ட தி. மு. கழகம், பெரியாம்பட்டி. பெரியண்ணஹள்ளி (அஞ்சல்), ஜோலார்பேட்டை ஆர். எம். எஸ். (வழி)' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சேலம் மாவட்ட தி. மு கழக மாநில மாநாட்டு நிதிக் குழுச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

திரு. வி. க. இலக்கிய மன்றம்

மேற்படி மன்றச் சார்பில், இவ்வாண்டு தமிழ் வித்துவான் புகுமுகத் தேர்வு வகுப்பு, 11—7—55 மாலை 6½ மணிக்கு, சென்னை—வண்ணை சர். தியாகராயர் கல்லூரியில் துவங்கி நடைபெறும். 1956-ம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் தேர்விற்குச் செல்ல விரும்பும் 'இண்டர்' தமிழ் மாணவர்களும், ஆசிரிய நண்பர்களும், ஆடவரும் பெண்டிரும் வகுப்பில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னைக் கல்விச் சங்கம்

10—7—55 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் 'வள்ளுவனார் உள்ளம்' என்னும் பொருள் பற்றி திரு. த. வே முருகேசனார் தலைமையில், திரு. வி. ப. கோவிந்தசாமி சொற்பொழிவாற்றுவார்.

சக்தி வாய்ந்ததாக மாற்றப்படுமாம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருச்சி வானொலி நிலையத்தை 'மிகச் சக்தி வாய்ந்த' நிலையமாக மாற்றிவிட முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தியாவிலுள்ள 'சக்தி வாய்ந்த' நிலையங்களில் திருச்சி வானொலி நிலையமும் ஒன்றாகிவிடும் என்றும் மத்திய சர்க்கார் செய்தி, ஒலி பரப்பு மந்திரி பி. வி. கேஸ்கர் கூறியிருக்கிறார்.

துப்பறியும் பயிற்சி நிலையம்

ஐதராபாத்தில் நிறுவப்படும்

இந்தியாவில் கையாளப்பட்டு வரும் போலீஸ் இலாகாவினரின் துப்பறியும் முறை, வர வர, பிரிட்டிஷ் துப்பறியும் முறையையொட்டி திருத்தியமைக்கப்பட்டு வருகிறதாம்!

இதற்கென மத்திய சர்க்கார், ஐதராபாத்தில் ஒரு துப்பறியும் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்க முடிவு செய்துள்ளனராம். மேற்படி நிலையம் அமைப்பது சம்மந்தமாக இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி பி என் தத்தர் ஐதராபாத் வந்துள்ளாராம்.

திருமணங்கள்

10—7—55 காலை 7½ மணிக்கு, சென்னை-தொண்டையார்நகர், எண் 33, பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, மணமகன் இல்லத்தில், தோழர் எஸ். அரங்கநாதன்—தோழியர் ஸ்ரீகிருஷ்ணம்மாள் திருமணம், தோழர் நீலதுரைக் கண்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், கே. ஆர் தானியேல், ஜி. முத்துகிருஷ்ணன், ஆர். ஜார்ஜ், ஜே. எஸ். ராஜன், மற்றும் பலர் பேசுவர்.

* * *

10—7—55 காலை 8½ மணியளவில், அமைந்தகரைக்கு அடுத்த திருமங்கலம், மணமகன் இல்லத்தில், தோழர் ஆர். ஜகன்னாதன்—தோழியர் பி. எம். ஜயலட்சுமி திருமணம், தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

10—7—55 காலை 9 மணிக்கு, பெருகவாழ்ந்தான் (மன்னார்குடி) மணமகள் இல்லத்தில், தோழர் கே. பாலகிருஷ்ணன்—தோழியர் அமிர்தவல்லி திருமணம், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து வாழ்த்துரை வழங்குவார்.

* * *

10—7—55 காலை 9 மணிக்கு, திசையன்விளையில், 'ஆனந்தன் டிரஸ் கம்பெனி' உரிமையாளர் தோழர் எம் எஸ். இராசையா—தோழியர் அலீஸ்ஞானம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் கே. ஆர். இராமசாமி, எம். ஜி. இராமச்சந்திரன், என். எஸ். நாராயணபிள்ளை, எஸ். முத்து ஆகியோர், மண விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவர்.

* * *

10—7—55 காலை 9 மணிக்கு, பொன்னேரி அடுத்த பெரிய காவனம் சிற்றூர். தோழர் கே. முனியன் இல்லத்தில், தோழர் எம். கோபால்—தோழியர் பி. பச்சையம்மாள் திருமணம் தோழர் அ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. சு. மணி, ஏ. இராதாமணாளன் ஆகியோர் பேசுவர்.

* * *

11—7—55 காலை 9 மணிக்கு, மன்னார்குடி, உப்புக்காரத் தெரு, தோழர் சி. சிவசாமி இல்லத்தில், தோழர் சிங்காரம்—தோழியர் சரசுவதி, தோழர் இலட்சுமிபதி—தோழியர் சரோசா திருமணங்கள் திரு. எம். கோபாலசாமி தென்கொண்டார் தலைமையில் நடைபெறும்.

* * *

11—7—55 அன்று, திருச்சாளப்பட்டியில், தோழர் இரா. காசிநாதன்—தோழியர் சிவகாமி திருமணம் நடைபெறும். தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.